**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– மானியக் கோரிக்கை அறிவிப்பு – 78 ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் சிறப்பு குழந்தைகளுடன் சிறப்பாசிரியர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுடன் ஒரு நாள் சுற்றுலா திட்டம்–நிதி ஒப்பளிப்பு– ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண்.05

நாள்:31–01–2017
துன்முகி, தை 18,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:

1. மானியக் கோரிக்கை எண்.52, 2016–17 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின் அறிவிப்பு நாள் 10–08–2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.4128/ ST.1/ 2016, நாள் 22.08.2016.
3. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், கடித எண்.3155/விபிஉ.I/2016, நாள் 08.10.2016.

------------

**ஆணை:**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களால் 10.08.2016 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஏனையவற்றுடன் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:-

“குழந்தைகளின் உடல், மனவளர்ச்சி ஆரம்பகாலத்தில் பெற்றிடும் கற்றல் மற்றும் அனுபவங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனை கருத்தில் கொண்டு மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு தமிழ்நாட்டில் ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் நிறுவப்பட்டுள்ளது. அரசின் நிதியுதவிடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் 78 ஆரம்பகால பயிற்சி மையங்கள் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** தமிழ்நாடு சுற்றுலா வளாச்சி கழகத்தின் மூலம் சிறப்பாசிரியர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுடன் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு ஒரு நாள் சுற்றுலா திட்டம் ரூ.8,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.”

**2.** மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, அரசின் நிதியுதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் **78** ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் சிறப்பு குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு ரூ.**500/–** வீதம் ஒரு மையத்திற்கு **20** குழந்தைகளை சிறப்பாசிரியர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுடன் ஒரு நாள் சுற்றுலாவாக சென்று வர ஏதுவாக **2016–2017** ஆம் நிதியாண்டிற்கு ரூ.**7,80,000/–**ஐ புதிய கணக்குத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**3.** மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், **78** ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் சிறப்பு குழந்தைகளுடன் சிறப்பாசிரியர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுடன் ஒரு நாள் சுற்றுலாவாக சென்றுவர (அனைத்து மாவட்ட தலைநகரங்களிலிருந்து **100** கி.மீட்டருக்கு மிகாமல்– ஒரு வழி பாதை) ஒரு குழந்தைக்கு ரூ.**500/–** வீதம் ஒரு மையத்திற்கு **20** குழந்தைகள் என்ற வீதத்தில் **1560** குழந்தைகளுக்கு ரூ.**7,80,000/–** மதிப்பீட்டில் சுற்றுலா விவரங்களுடன் கருத்துரு அனுப்பியுள்ளார்.

**4.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துரு மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் கருத்துரு ஆகியவை நன்கு பரிசீலனை செய்து அரசு அதனை ஏற்று **78** ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் சிறப்பு குழந்தைகளுடன் சிறப்பாசிரியர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுடன் ஒரு நாள் சுற்றுலா சென்றுவர (அனைத்து மாவட்ட தலைநகரங்களிலிருந்து **100** கி.மீட்டருக்கு மிகாமல்– ஒரு வழி பாதை) ஒரு குழந்தைக்கு ரூ.**500/–** வீதம் ஒரு மையத்திற்கு **20** குழந்தைகள் என்ற வீதத்தில் **1560** குழந்தைகளுக்கு ரூ.**7,80,000/–** (ரூபாய் ஏழு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

**5.** மேலே பத்தி **4**–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**2235**–சமூகப் பாதுகாப்பும் நலனும்–**02**– சமூக நலன்–**101**–மாற்றுத் திறனாளிகள் நலன்–I திட்டத்தில் சேராதது– DG– ஆரம்பநிலை பயிற்சி மைய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு வருடாந்திர சுற்றுலா திட்டம்–**54**–திட்டமிட்ட பயணங்கள் குறித்த செலவு.
[ த.தொ.கு எண்.**2235–02–101–DG–5409** ]

**6.** மேலே பத்தி **4**–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு “புதுப்பணி” குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு–செலவு–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட மன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் **1963**ல் உள்ள அட்டவணை “A” படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித் (வரவு–செலவு–I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை **2016–17** ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில்

சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித்(சந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்று திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண்.2774/நிதி(சந)/2017, நாள் 25.01.2017–ன்படி இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1956 (ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஆறு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநிலஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்(மாற்றுத் றனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், AAD / FSF Cell /Audit-I/II, சென்னை–18.
முதன்மை மாநிலய கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

**<u>நகல்:–</u>**
நிதி (சந/வ.செ. I & II )துறை, சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சுற்றுலா வளாகம், நெ.2, வாலஜா சாலை, சென்னை–2.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.